Sub Court, Eraniel O.S.No.113/2021

**<u>09.11.2022</u>**

வா.சா.1 திரு. மைதீன்கான்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கு தாக்கல் செய்ய என்னுடைய வழக்கறிஞருக்கு தகவல் சொன்னது யார் என்றால் என் வழக்கறிஞருக்கே அந்த விபரங்கள் தெரியும். நான் இந்த வழக்கு தவிர வேறு வழக்குகள் எதுவும் போட்டது கிடையாது. நான் முஸ்லீம் முகலத்தில் 18 ஆண்டுகள் செயலாளராகவும், உதவி தலைவராகவும், இயக்குனராகவும் இருந்ததைக் காட்டுவதற்கும் பால் விநியோக கூட்டுறவு சங்கத்திலும் கூட்டுறவு பண்டகச்சாலையிலும் பொறுப்பில் இருந்ததைக் காட்டுவதற்கும் ஆவணம் தாக்கல் செய்ய முடியும். நான் அரசியல் கட்சிகளில் இருந்ததால் எனக்கு வேண்டிய நபர்கள் ஊரில் உண்டு என்றால் சரிதான். அவ்வாறு வேண்டிய நபர்கள் இருந்து செல்வாக்காக ஊரில் இருந்ததால் என்னை அங்கு யாரும் எதிர்க்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. என் மகனும், மருமகளும் பொறியாளராக வேலை பார்ப்பதால் எனக்கு அரசு சம்மந்தமான அதிகாரிகளிடம் நிறைய தொடர்பு உண்டு என்றால் சரியல்ல. என் மகனும், மருமகளும் தனியார் துறையில் வேலை பார்க்கிறார்கள். நான் சொல்லும் கடை எண்.11/88 பி என்னுடைய வீட்டிற்கு வலது பக்கம் உள்ளது. அந்த கடையின் மின் இணைப்பு என் வீட்டுடன் தனித் தனியாக உள்ளது. கடையின் மின் இணைப்பிற்கு அளவீடு குறிக்க வீட்டு கேட்டை திறந்து உள்ளே வந்து தான் குறிக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த கடையை வாடகைக்கு எடுத்துள்ள ஜாகீர்உசேன் என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவருக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை. கடை எண்.11/88 பி உள்ள இடத்தின் சர்வே எண்ணை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மின் இணைப்பு எண்.07- 174-015-939 கொண்ட கடையைத் தான் ஜாகீர்உசேன் நடத்தி வந்தார் என்றால் சரிதான். ஜாகீர்உசேன் எனக்கு துாரத்துச் சொந்தம். ஜாகீர்உசேன் என் மீது மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் 05.02.2020 ம் தேதி புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகாரில் மனு எண்.35/2020 என்று எண் கொடுக்கப்பட்டு விசாரணை நடந்து அந்த விசாரணையில் நான் அவரை இடைஞ்சல் செய்ய மாட்டேன் என்று எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை. வீடும், கடையும் நல்ல நிலையில் உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு மோசமான நிலையில் உள்ளது என்று பிராதிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். கடை சேதம் உள்ளது என்று இளநிலை பொறியாளருக்கு மனுக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மின்கம்பம் சேதமாக உள்ளது என்று தான் மனுக் கொடுத்தேன். நான் கொடுத்த மனு சம்மந்தமாக இளநிலை பொறியாளர்

29.10.2019ம் தேதி ஜாகீர்உசேன் என்பவருக்கும் எனக்கும் பதில் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த பதிலில் கட்டிடம் சேதமாக இருப்பதாக கூறப்பட்டுள்ளதால் அதில் மின் கசிவு ஏற்பட்டால் அதற்கு ஜாகீர்உசேன் பொறுப்பு என்று கூறப்பட்டுள்ளது என்றால் எனக்கு அந்த பதில் வரவில்லை. ஜாகீர்உசேன் என் மீது இளநிலை பொறியாளருக்கும் மற்ற உயர் அதிகாரிகளுக்கும் நான் மேற்படி கடையின் மின் இணைப்பை துண்டித்து வைத்துள்ளதாக பல புகார்கள் அனுப்பியுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. அதன் பிறகு இளநிலை பொறியாளர் என்னிடம் அவ்வாறு பியூஸ் கேரியரை பிடுங்கி மின் இணைப்பை துண்டிக்கக் கூடாது என அறிவுறுத்தினார் என்றால் சரியல்ல. அதனால் ஜாகீர்உசேன் என் மீதும் இவ்வழக்கு 3 முதல் 5 பிரதிவாதிகள் மீதும் சென்னை மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை மனு எண்.WP (MD) 19503/2020 என்ற மனுவை தாக்கல் செய்து அது ஜாகீர்உசேனுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் அது எனக்குத் தெரியாது. அதை எதிர்த்து நான் WA 623/2021 என்று மேல்முறையீடு தாக்கல் செய்து அது 19.03.2021ம் தேதி தள்ளுபடி ஆனது என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த உத்தரவின் அடிப்படையில் ஜாகீர்உசேன் 18.01.2021ம் தேதி 5ம் பிரதிவாதிக்கு மின் இணைப்பை மீண்டும் தர வேண்டும் என்றுக் கேட்டு மனுச் செய்தார் என்றால் சரியல்ல. அந்த மனுவின் பேரில் 5ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி 23.01.2021ம் தேதி கடிதம் அனுப்பினார் என்றால் அது எனக்குத் தெரியாது. அதன் பிறகு 3ம் பிரதிவாதி மற்றும் அவருடன் வந்த அலுவலர்கள் உயர்நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த வந்த போது நான் வீட்டின் கேட்டை திறக்காததால் திரும்பிச் சென்றார்கள் என்றால் சரியல்ல. அந்த விபரத்தைக் குறிப்பிட்டு 3ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு மின் இணைப்பு கொடுக்கச் சென்ற போது கதவு பூட்டப்பட்டிருந்ததால் மின் இணைப்பு கொடுக்க முடியவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. அதனால் 25.02.2021ம் தேதி கட்டிடத்தை ஆய்வு செய்து மின் இணைப்பு கொடுப்பதற்காக எனக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதே போல் மற்றொரு கடிதம் உயர்நீதிமன்ற உத்தரவுடன் சேர்த்து எனக்கு சார்வு செய்ய வந்த போது நான் அதை வாங்க மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு வந்த இரண்டு கடிதங்களையும் நான் வாங்க மறுத்ததால் மணவாளக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் என்னுடைய வீட்டில் அறிவிப்பு ஒட்டி சார்வு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் அங்கு இல்லவே இல்லை. அவ்வாறு ஒட்டி சார்வு செய்ததால் ஆத்திரப்பட்டு நான், என்னுடைய மகன் ஷானவாஸ், என் மகனின் நண்பன் பசீத், சைரஸ் மற்றும் கண்டால் அடையாளம் தெரியும் மூன்று நபர்கள் சேர்ந்து 3ம் பிரதிவாதியையும் அவருடன் வந்த அலுவலர்களையும் தகாத கெட்ட வார்த்தைகள் பேசி பணியைச் செய்ய விடாமல் தடுத்து விட்டோம் என்றால் சரியல்ல. நான் அங்கு இல்லவே இல்லை. அதற்கு 3ம் பிரதிவாதி அன்றைய தினமே மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

அந்த புகார் மனு, மனு எண். 54/21 என 25.02.2021ம் தேதி விசாரிக்கப்பட்டு 03.03.2021ம் தேதி மணவாளக்குறிச்சி காவல் நிலைய குற்ற எண். 32/2021 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1ல் கண்ட வழக்கில் இவ்வழக்கு பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றாலும் அதில் மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று கேட்கவில்லை என்றாலும் கட்டிடம் பழுதடைந்துள்ளதாக கூறவில்லை என்றாலும் சரிதான். நான் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் மேற்படி கடையின் மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று WP No.10066/2020 என்ற வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் மின் இணைப்பை துண்டிக்க அந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை. என் உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்று அந்த வழக்கைப் போட்டேன். அந்த வழக்கு 22.09.2020ம் தேதி தள்ளுபடி ஆனது என்றால் அது பற்றி எனக்கு தகவல் தெரியாது. அந்த வழக்குப் பற்றிய விபரத்தை இந்த வழக்கிலோ அசல் வழக்கு எண்.194/2018 வழக்கிலோ சொல்லவில்லை என்றால் அந்த வழக்கை நானே போடவில்லை. அந்த வழக்கில் நான் அனுப்பிய அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பில் மேற்படி நீதி பேராணை வழக்கைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் நான் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பே அனுப்பவில்லை. எனவே நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் பற்றி எனக்குத் தெரியாது. என் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். என் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் நான் அமர்வு நீதிமன்றத்தில் பிணை உத்தரவு பெற்று நீதிமன்றத்தில் சரண்டராகி பிணையில் வந்தேன் என்றால் சரிதான். அதேபோல் என் மகனும், அவருடைய நண்பர்களும் பிணை உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். மின் இணைப்பு சம்மந்தமாக ஏதாவது புகார்கள் வந்தால் அது குறித்து ஆய்வு செய்து சரி செய்ய வேண்டியது பிரதிவாதிகளின் கடமை என்றால் சரிதான். அதேபோல் நீதிமன்றம் உத்தரவிட்டால் அதை நிறைவேற்றுவதும் பிரதிவாதிகளின் கடமை என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவுப்படி தான் பிரதிவாதிகள் 25.02.2021ம் தேதி மின் இணைப்பு குறித்து ஆய்வு செய்ய வந்தார்கள் என்றால் நான் அந்த இடத்தில் கிடையாது. என் மீது கொடுக்கப்பட்ட குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது எனக்குத் தெரியவில்லை. போலிசார் பொய் வழக்கு போட்டதாக காவல்துறை உயரதிகாரிகளுக்கோ நீதிமன்றம் மூலமாகவோ நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என் மகன் 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்ததாக சொல்லும் வழக்கின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. குற்ற எண்.32/2021 வழக்கு நிலுவையில் இருந்து வருவதால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் செய்த தவறை மறைப்பதற்காக பொய்யான விபரங்களை குறிப்பிட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தான் ஆய்வு செய்ய வந்தார்கள் என்பதால் அவர்களுடைய தனிப்பட்ட பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளது

நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த மூல காரணமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என்
முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.